# A Research on Livelihood Changes Among Displaced Fishing Communities in Eastern Sri Lanka : The Case of Panichchankeny Lagoon in Batticaloa District

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH

26 MAR 2014

VANTHARUMOOLAI,
CHENKALADY.

**Maragathalingam Varnagulasingam**
**PGS(PhD)/2004/AC/02**

PhD03
Thesis
Library - EUSL

03

**Department of Geography**
**Faculty of Arts and Culture**
**Eastern University of Sri Lanka**
**Vantharumoolai**
**Sri Lanka**

**2013**

PROCESSED
Main Library, EUSL

# ஆய்வுச் சுருக்கம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தினை நிர்ணயிக்கும் முக்கிய தொழில் முயற்சியாக விவசாயத்திற்கு அடுத்த படியாக மீன்பிடி காணப்படுகின்றது. வாகரைப்பிரதேசத்தில் காணப்படும் மீன்பிடிக்கேதுவான பௌதிக அமைப்பு இங்கு வாழும் மக்களில் அதிமானோரை மீன்பிடியில் ஈடுபடச்செய்துள்ளது. ஆய்வுப்பிரதேசமான வாகரைப்பிரதேசத்தில் வாழும் மக்களில் ஏறத்தாள 80 சதவிகிதத்தினரின் முதன்மை வாழ்வாதாரத் தொழிலாக மீன்பிடியே திகழ்கின்றது. அபிவிருத்தியில் பின்தங்கிய இப் பிரதேசத்தில் மீன்பிடி தவிர்ந்த ஏனைய தொழில்வாய்ப்பிற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. மாத சராசரி வருமானமாக 1600 ரூபா காணப்படுவதுடன சமமற்ற வருமானப்பரம்பலும் வறுமை மட்டத்திற்கு கீழான வாழ்வாதார நிலையும் முக்கிய பிரச்சினையாக உள்ளது. மீனவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை விஸ்தரிக்கக் கூடிய நிதி வசதிகளை வழங்கக் கூடிய எந்த வித நிதி நிறுவனங்களும் 2008ம் ஆண்டு வரை இப்பிரதேசத்தில் செயற்படவில்லை. கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் தமது உறவுகள், உடமைகளை, உயிர்களையும் இழந்தவர்களாகவும இவற்றின் காரணமாக தமது வாழ்வாதாரத்தினை இழந்து வறிய நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாகவும் இப்பகுதி மக்கள் உள்ளனர். யுத்தம், பாதுகாப்பு காரணங்களுக்காக மீன்பிடிக்கு விதிக்கப்பட்ட தடைகள், நேரக்கட்டுப்பாடுகள் மற்றும் கட்டுமான வசதிகளில் காணப்பட்ட குறைபாடுகள், வசதிகள் மற்றும் சேவைகள் தொடர்பில் காணப்பட்ட குறைபாடுகள் அத்துடன் அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகள் போன்றவை மக்களது வாழ்வாதாரம், கலாசாரம், பொருளாதாரம், கல்வி போன்ற சகல விடயங்களையும் பாதித்து இப் பகுதி மக்களின் வாழ்வாதார நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. இந்த நிலைமைகளை வெளிக்கொணரத்தக்க எந்த ஒரு ஆய்வும் இது வரை இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவில்லை. இந்த ஆய்வு அந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்வதாக உள்ளது.

வாகரைப் பிரதேசத்தில் உள்ள பனிச்சங்கேணி வாவியில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவக்குடும்பங்களது வாழ்வாதார மாற்றங்களை ஆய்வு செய்வதாக அமையும் இந்த ஆய்வின் பிரதான நோக்கமாக வளம் நிறைந்து காணப்படும் பனிச்சங்கேணி வாவியில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவக்குடும்பங்களது வாழ்வாதார நிலை மிக நீண்ட காலமாக பின்தங்கிய நிலையில் இருப்பதற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்து இம் மக்களுக்கு ஒரு நிலைபேறான வாழ்வாதாரத்தினை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய பொறிமுறையொன்றினை கண்டறிவதாக உள்ளது. அத்துடன் வாகரைப்பிரதேசத்தில் உள்ள வாழ்வாதார சொத்துக்கள் தொடர்பான வாய்ப்புக்கள், அவை தொடர்பான பலம், பலவீனம்,

அச்சுறுத்தல் தொடர்பான விடயங்களை வெளிக்கொணர்வதுடன் அவ் வளங்களை உரிய முறையில் பயன்படுத்துவதற்கான வழிகளைக் காண்பதாகவும் ஆய்வு நோக்கம் அமைகின்றது.

இவ் ஆய்விற்கு வேண்டிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக வாகரைப்பிரதேசத்தில் உள்ள முக்கிய மீனவக் கிராமங்களில் மிகவும் பொருத்தமான 5 கிராமங்களை தெரிவு செய்து ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மீனவக் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப 121 மாதிரிகள் (10%) தெரிவு செய்யப்பட்டு அவர்களிடம் நன்கு திட்டமிட்ட வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன. இவை தவிர கலந்துரையாடல்கள், நேர்காணல்கள், கள விஜயம் மூலமும் தகவல்கள் பெறப்பட்டன. தேவைக்கேற்ப இரண்டாம் நிலைத்தரவுகள் உரிய திணைக்களங்களில் இருந்து பெறப்பட்டது.

யுத்தத்தின் பின்னர் வாகரைப்பிரதேசத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, உட்கட்டமைப்பு, சேவைகள் என பலதரப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் இத்திட்டங்கள் மூலம் வாழ்வாதார ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட மீனவ சமூகம் உண்மையானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான வாழ்வாதாரத்தினை அடைய முடியுமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. காரணம் அமுல் செய்யப்பட்டுள்ள திட்டங்கள் பொருளாதார ரீதியாக வருவாயைப் பெருக்கிக் கொள்ள உதவக்கூடியதாக உள்ளதே தவிர வாழ்வாதார ரீதியான அபிவிருத்தியை எட்டும் அளவிற்கோ அல்லது சமூக ரீதியான அபிவிருத்தியை எட்டும் அளவிற்கோ திட்டமிடப்படாதவையாகவே உள்ளன. வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சமூகஅபிவிருத்தி ஆகிய இரு விடயங்களிலும் ஏற்படுத்தப்படும் அபிவிருத்தியே பனிச்சங்கேணி வாவி மீனவக்குடும்பங்களது வாழ்வாதார நிலையை மேம்பாடு செய்வதற்கு வேண்டியதாக உள்ளது.

இந்த வகையில் இந்த ஆய்வு வாகரைப்பிரதேசத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு மேலதிகமாக, வாகரைப்பிரதேசத்தில் இது வரை பயன்படுத்தாமல் உள்ள வளங்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியான வருவாயைக் கொடுக்கத்தக்கதான சிற்றளவு மற்றும் பேரளவிலான தொழில் சார் திட்டங்களையும், குறிப்பாக பாதிக்கப்பட்ட பெண்கள், விதவைகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கக் கூடிய திட்டங்களையும், சேவைகள் துறையில் குறிப்பாக கல்வி, சுகாதாரம், வங்கி, சந்தை உள்ளிட்ட சேவைகளை மேலும் விஸ்தரிக்கக் கூடிய திட்டங்களையும் உட்கட்டமைப்பு, போக்கு வரத்து (உள்ளூர் சிறு வீதிகள்) தொலைத் தொடர்பு போன்ற வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அத்தியாவசியமான திட்டங்களையும் காலதாமதமின்றி அமுல்செய்ய வேண்டும். அத்துடன் திட்டங்களை உருவாக்கும் போதும் அமுல்படுத்தும் போதும் இப்பிரதேச மக்களின் முழுமையான பங்களிப்பு உள்வாங்கப்படவேண்டியதன் அவசியத்தினையும் இவ் ஆய்வு வலியுறுத்துகின்றது. அத்துடன் சமூக அபிவிருத்தியினை மேம்படுத்தும் வகையில் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையினை

...

வளர்க்கக்கூடிய திட்டங்களையும், சமூகங்களுக்குள்ளே நல்ல மனித நேயங்களையும் சிறந்த பண்புகளையும் வளர்க்கத்தக்க திட்டங்களையும் சமூகத்தில் சீர்கேடுகளுக்கு காரணமாக அமையும் தீய பழக்க வழக்கங்களில் இருந்து மக்களை பாதுகாக்கத்தக்க திட்டங்களையும் கலாதாமதமின்ற அமுல்படுத்தவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும் எனவும் இந்த ஆய்வு சிபாரிசு செய்கின்றது. இவ்வாறான செயற் திட்டங்களை வாகரைப்பிரதேசத்தில் அமுல்படுத்துவதன் மூலமே வாகரைப்பிரதேச மக்கள் தாம் இழந்த வழமான வாழ்க்கையை மீண்டும் பெற்று எதிர்காலத்தில் ஒரு நிலைபேறானதும் மகிழ்ச்சிகரமானதுமான வாழ்க்கையை வாழக்கூடிய வாழ்வாதார நிலையை எட்டுவர்.

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆய்வுச்சுருக்கம் (Abstract in English) | i |
| ஆய்வுச்சுருக்கம் (தமிழ்) | ii |
| உறுதியுரை | v |
| சமர்ப்பணம் | vi |
| பதிப்புரிமை | vii |
| பொருளடக்கம் | viii |
| அட்டவணைகள் | xvi |
| படங்கள் | xx |
| ஒளிப்படங்கள் | xxi |
| வரைபடங்கள் | xvi |
| வரைபடங்கள் | xxiii |
| பின்னிணைப்புக்கள் | xxv |
| அட்டைப்படம் | xxvi |
| நன்றியுரை | xxvii |


### அத்தியாயம் - 01


| | | | |
|---|---|---|---|
| 1 | | ஆய்வு தொடர்பான அறிமுகம் | 01 |
| | 1.1 | அறிமுகம் | 01 |
| | 1.2 | ஆய்வின் முக்கியத்துவம் | 04 |
| | 1.3 | முரண்பாடுகளும் இடப்பெயர்வுகளும் | 05 |
| | 1.4 | ஆபத்தான சூழ்நிலையும் வாழ்வாதார தந்திரோபாயங்களும் | 06 |
| | 1.5 | ஆய்விற்கான அடிப்படைத் தரவுகள் | 06 |
| | 1.6 | கட்டுமான வசதிகளும் அபிவிருத்தியும் | 07 |
| | 1.7 | ஆய்வு அத்தியாய ஒழுங்கமைப்பு | 09 |
| | 1.8 | ஆய்விற்கான காலம் | 09 |


### அத்தியாயம் - 02

| | | |
|---|---|---|
| 2 | ஆராய்ச்சியின் போதான ஆய்வு முன்னோடிகளின் முக்கியத்துவம் | 11 |
| 2.1 | வாழ்வாதாரம் தொடப்பான ஆய்வு முன்னோடிகள் - அறிமுகம் | 11 |
| 2.2 | வாழ்வாதாரம் தொடர்பான ஆய்வுகள் | 11 |
| 2.3 | வாழ்வாதாரம் தொடர்பான ஆய்வுகள் மீளாய்வு | 12 |
| 2.4 | வாழ்வாதாரம் தொடர்பான ஆய்வு முன்னோடிகள் | 12 |
| 2.5 | வாழ்வாதாரம் என்பது என்ன? | 16 |
| 2.6 | நிலைத்து நிற்கும் வாழ்வாதாரம் என்பது என்ன? | 18 |
| 2.7 | வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமான வளங்களை பிரித்து நோக்கல் | 18 |
| 2.7.1 | பௌதிக வளம் | 18 |
| 2.7.2 | மனித வளம் | 19 |
| 2.7.3 | நிதி | 20 |
| 2.7.4 | சமூக வளம் | 20 |
| 2.7.5 | இயற்கை வளம் | 21 |
| 2.7.6 | வாழ்வாதார உருவக மாதிரி | 22 |
| 2.7.7 | அடிக்குறிப்புக்கள் | 28 |


## அத்தியாயம் 03


| | | |
|---|---|---|
| 3 | வாழ்வாதாரத் தொழிலாக மீன்பிடி | 30 |
| 3.1 | அறிமுகம் | 30 |
| 3.2 | இலங்கையின் மீன் பிடித்தொழில் : கிழக்கு பிராந்தியம் தொடர்பான நோக்கு | 31 |
| 3.3 | மட்டக்களப்பு மாவட்டத்தின் மீன்பிடித் தொழில் | 36 |
| 3.4 | மட்டக்களப்பு மாவட்டத்தின் சமூக பொருளாதார பௌதிக தன்மைகள் | 39 |
| 3.4.1 | சமூக அமைப்பு | 39 |
| 3.4.2 | பௌதி தரைத்தோற்ற அம்சங்கள் | 40 |
| 3.4.3 | காலநிலை | 43 |
| 3.4.4 | மழை வீழ்ச்சி | 43 |
| 3.4.5 | வெப்பநிலை | 44 |

3.4.6 நிலப்பயன்பாடு 45
3.4.7 மட்டக்களப்பு மாவட்டத்தின் மக்கள் தொகை 47
3.4.8 அரச கட்டுப்பாட்டுப்பிரதேசம் அரச கட்டுப்பாடற்ற பிரதேசம் 48

3.5 ஆய்வுப் பிரதேச அறிமுகம் 49
3.5.1 ஆய்வுப்பிரதேசத்தின் சமூக பொருளாதார நிலை 54
3.5.2 ஆய்வுப்பிரதேச மக்களின் வருமானமும் வாழ்வாதார நிலையும் 58
3.5.3 முதலீட்டு வசதிகள் 58
3.5.4 தங்கியிருப்போர் விகிதாசாரம் 60
3.5.5 வீட்டு வசதிகள் 60
3.5.6 பொதுச்சுகாதார வசதிகள் 61
3.5.7 உட்கட்டமைப்பு வசதிகள் 61
3.5.8 கல்வி மற்றும் எழுத்தறிவு 62
3.5.9 கல்வியில் சமத்துவமின்மை 62
3.5.10 சமூக நலத்திட்டங்கள் 63

## அத்தியாயம் - 04

4 ஆய்வு முறையியல் 64
4.1 அறிமுகம் 64
4.2 ஆய்வு நோக்கம் 64
4.3 ஆய்வு வினாக்கள் 65
4.4 ஆய்வு கருதுகோளும் காலவரையறையும் 66
4.5 ஆய்வு நுட்பம் 67
4.6 தகவல்சேகரிப்பு முறைகள் 68
4.6.1 முதல் நிலைத் தரவுகள் 68
4.6.2 இரண்டாம் நிலைத் தரவுகள் 70
4.7 மாதிரிகளின் தெரிவு முறையும் நுட்பங்களும் 70
4.7.1 ஆய்விற்கான இடத்தினை தெரிவு செய்தல் 71
4.7.2 ஆய்விற்கு வேண்டிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான காலத்தினை தெரிவு செய்தல் 73

| | | |
|---|---|---|
| 4.7.3 | ஆய்வின் இலக்கு மக்களிடையே இருந்து சரியான தகவல்களைப் பெறுவதற்கும் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் கலந்துரையாடலுக்குமான சரியான மக்கள் குழுக்களை தெரிவு செய்தல் | 74 |
| 4.8 | வாழ்வாதார நிலையை அறியும் முறை | 76 |

## அத்தியாயம் - 05

| | | |
|---|---|---|
| | வாகரைப்பிரதேச மக்களின் வாழ்க்கை வரலாறும் வாழ்வாதார மாற்றங்களும் அடையாளம் காணப்பட்ட வாழ்வாதார சொத்துக்களும் | 77 |
| 5 | அறிமுகம் | 77 |
| 5.1 | 1983க்கு முன்னர் வாகரைப் பிரதேச சமூக பொருளாதார அரசியல் நிலை | 77 |
| 5.2 | மட்டக்களப்பு மாவட்ட அரசியல் நிலை 1983க்கு பின்னர் | [illegible] |
| 5.3 | 1983 தொடக்கம் 1990 வரையிலான காலகட்டம் | 90 |
| 5.4 | 1990 தொடக்கம் 2000 வரையிலான காலகட்டம் | 92 |
| 5.5 | 2000 தொடக்கம் 2006 வரையிலான காலகட்டம் | 95 |
| 5.6 | 2006 இறுதி யுத்த காலம் | 96 |
| 5.7 | இடப்பெயர்வும் வகைப்பாடும் | 97 |
| 5.8 | வாகரைப்பிரதேசத்தில் காணப்படும் முக்கிய வாழ்வாதார சொத்துக்கள் | 99 |
| 5.9 | பனிச்சங்கேணி வாவி மீனவர்களின் முக்கிய வாழ்வாதார சொத்துக்கள் | 100 |
| 5.9.1 | இயற்கையான சொத்துக்கள் | 101 |
| | 1. பனிச்சங்கேணி வாவி | 101 |
| | 2. வாவியுடன் தொடர்பு பட்ட பரந்த கடற்பரப்பு | 105 |
| | 3. பரந்த நிலப்பரப்பினைக் கொண்ட காட்டு வளம் | 105 |
| 5.9.2 | பௌதிக சொத்துக்கள் | 117 |
| | 1. மீன்பிடி உபகரணங்கள் | 118 |
| | 2. மின்சாரம் உள்ளிட்ட ஏனைய வசதிகள் | 119 |
| | 3. அனுபவம் மிக்க மனித வளம் | 122 |
| | 4. கல்வி | 123 |
| | 5. வீதியமைப்பும் போக்குவரத்தும் | [illegible] |
| | 6. சமூக ஒருங்கிணைவு | 129 |

5.9.3 வாழ்வாதார சொத்துக்களின் பயன்பாடுகள் 130
1. வாவி தொடர்பான சட்ட நடைமுறைகள் 130
2. இராணுவ நிர்வாகத்திற்குட்பட்ட மீன்பிடி அனுமதி முறை 132
3. காட்டு வளம் தொடர்பான சட்ட நடைமுறைகள் 136
அடிக்குறிப்புக்கள் 139

## அத்தியாயம் - 06

6 தகவல் பகுப்பாய்வும் ஆய்வின் முடிவுகளும் 140
6.1 அறிமுகம் 140
6.2 தெரிவு செய்யப்பட்ட மீனவர்கள் தொடர்பான பொதுவான தகவல்கள் 141
அ. குடும்ப அங்கத்தவர்கள் 141
ஆ. குடும்ப அங்கத்தவர் அளவும் குடும்பங்களின் எண்ணிக்கையும் 141
இ. குடும்ப அங்கத்தவர் அடிப்படையில் குடும்பங்களின் நிலை 142
ஈ. குடும்பங்களின் மொத்த உறுப்பினர்கள் விபரம் 143
6.2.1 குடும்பத்தலைவர் தொடர்பான விபரம் 147
6.2.2 குடும்பத்தலைவரது வயது ரீதியான விபரம் 148
6.2.3 மத அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்கள் 151
6.2.4 தொழில் நிலை 152
6.2.5 ஆய்வின் பரிந்துரை 155
6.3 மீனவக்குடும்பங்களினது வருமானம் 160
6.3.1 வருமான காலம் 166
6.3.2 சேமிப்பு 169
6.3.3 ஆய்வின் பரிந்துரை 172
6.4 உணவு நிலையும் போசாக்கும் 177
6.4.1 ஆய்வின் பரிந்துரை 180
6.5 கல்வி வசதிகளும் மாணவர் எதிர்காலமும் 180
6.5.1 பாடசாலை வசதிகளும் மாணவர் மற்றும் ஆசிரியர் விபரங்கள் 181
6.5.2 தேசிய மட்ட பரீட்சைகளும் மாணவர் எதிர்கொண்ட சவால்களும் 182
6.5.3 அரசியல் காரணிகளும் பாடசாலை இடைவிலகலும் 184
6.5.4 பெற்றார் அல்லது பாதுகாவலர் கல்வி நிலை 191
6.5.5 கல்வியில் விழிப்புணர்வு 192

6.5.6 கல்வியை விருத்தியைப் பாதிக்கும் காரணிகள் 195

6.5.7 அனர்த்தங்களின் பின்னரான கல்வி விருத்தி 196

6.5.8 ஆய்வின் பரிந்துரை 200

6.6 இருப்பிட வசதிகள் 201

6.6.1 குடியிருப்பு மனைகளின் தரமும் முரண்பாட்டுக் காலங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் 201

6.6.2 யுத்த காலத்தில் பாதிப்பிற்குள்ளான வீடுகள் 203

6.6.3 சுனாமி மற்றும் யுத்த அனர்த்தங்களின் பின்னரான வாழிட நிலை 205

6.6.4 ஆய்வின் பரிந்துரை 209

6.7 வாழ்வாதாரத்திற்கு அத்தியாவசியமான சுகாதாரத் தேவைகள் 210

6.6.1 குடிநீர் 210

6.6.2 மலசலகூட வசதிகள் 212

6.6.3 ஆய்வின் பரிந்துரை 213

6.8 வாழ்வாதாரத்திற்கு தேவையான பொது வசதிகள் 213

6.8.1 வைத்திய சாலை வசதிகள் 214

6.8.2 மின்சார வசதியும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் 216

6.8.3 போக்குவரத்திற்காக தெரிவு செய்யப்பட்ட மீனவர்கள் பயன்படுத்திய வாகனங்கள் 221

6.8.4 போக்குவரத்திற்கான வீதியமைப்புக்கள் 222

6.8.5 சமூக ஒருங்கிணைவு அமைப்புக்கள் 226

6.8.6 சந்தை வசதிகள் 228

6.8.7 ஆய்வின் பரிந்துரை 231

6.9 யுத்த காலத்தில் ஏற்பட்ட இழப்புக்களும் வாழ்வாதார சொத்துக்களுக்கான பாதுகாப்பும் 233

6.9.1 மனித செயற்பாடுகளினால் ஏற்படும் ஆபத்துக்களும் இழப்புக்களும் 233

6.9.2 யுத்தகால உயிரிழப்புக்கள் 234

6.9.3 யுத்தகால சொத்திழப்புக்கள் 237

6.9.4 இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட ஆபத்துக்களும் இழப்புக்களும் 239

6.10 அனர்த்த கால இடப்பெயர்வுகள் 240

6.10.1 ஆய்வுப்பிரதேசத்தில் இடம் பெற்றுள்ள இடப்பெயர்வுகள் 241

6.10.2 ஆபத்துக்கள் நிறைந்த யுத்தகால இடப்பெயர்வுகள் 242

6.10.3 அகதிமுகாம் வாழ்க்கையும் வாழ்வாதார பாதிப்புக்களும் 248

6.10.4 ஆய்வின் பரிந்துரை 251

6.11 எதிர்கால வாழ்வாதார திட்டங்கள் 252

6.11.1 ஆய்வின் பரிந்துரை 255
6.12 விசேட தேவையுள்ளவர்களுக்கான திட்டங்கள் 256
6.13 வாகரைப்பிரதேசத்தில் அய்வின்மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ள வாழ்வாதார வளங்கள் 257
அடிக்குறிப்புக்கள் 258


## அத்தியாயம் 07


7 முடிவுரையும் பரிந்துரைகளும் 259
7.1 எதிர் காலத்தில் வாகரை பனிச்சங்கேணி வாவி மீனவர்களின் நிலைத்து நிற்கக் கூடியதான வாழவாதாரததினை அடைநது கொள்வதற்கேதுவான ஆலோசனைகளும் பரிந்துரைகளும் 259
7.2 வாழ்வாதார அபிவிருத்தி திட்டங்கள் 264
7.2.1 வருமானத்தினை கொடுக்கக் கூடிய சிற்றளவு, பேரளவிலான திட்டங்கள் 264
7.2.2 தொழில்வாய்ப்பினை வழங்கக் கூடிய திட்டங்கள் 265
7.2.3 சேவைகளை வழங்கக் கூடிய திட்டங்கள் 265
7.2.4 போக்குவரத்து, உட்கட்டமைப்பு, தொடர்பாடல் திட்டங்கள் 266
7.3 சமூக அபிவிருததித திடடஙகள 267
7.3.1 சமூகங்களுக்கிடையேயான புரிந்துணர்வு விருத்தித் நிகழ்ச்சித் திட்டங்கள் 267
7.3.2 சமூகநலத்திட்டங்கள் 267
7.3.3 சமூகச் சீர்குலைவுகளை நிவர்த்தி செய்யக் கூடிய திட்டங்கள் 268


## பிற்குறிப்புக்கள்


உசாத்துணை நூல்கள் 269
பின்னிணைப்பு 1 பின்னிணைப்பு அட்டவணைகள் 278
பின்னிணைப்பு 2 கடற்தொழில் கட்டளைச்சட்டம் (தமிழ் மொழிபெயர்ப்பு) 289